# A DEVELOPMENT PLAN FOR THE UPLIFTMENT OF QUALITY OF LIFE OF THE PEOPLE IN THE MANMUNAI PATTU (ARAYAMPATHY) SECRETARIAT DIVISION

MR. VELLATHAMBY JEYARAJAH

25924

DEPARTMENT OF MANAGEMENT

FACULTY OF COMMERCE AND MANAGEMENT

EASTERN UNIVERSITY, SRI LANKA

1996

111

Library - EUSL

PROCESSED
Main Library, EUSL

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | நன்றியுரை | |
| 02. | ஆய்வின் சுருக்கம். | 1 - 2 |
| 03. | அத்தியாயம் - 01<br>அறிமுகம் | 3 - 8 |
| 04. | அத்தியாயம் - 02<br>நூல் ஆய்வு | 9 - 27 |
| 05. | அத்தியாயம் - 03<br>மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவு பற்றிய அறிமுகம் | 28 - 49 |
| 06. | அத்தியாயம் - 04<br>விவசாயமும் ஏனைய வேளாண்மையும் | 50 - 74 |
| 07. | அத்தியாயம் - 05<br>மீன்பிடி | 75 - 89 |
| 08. | அத்தியாயம் - 06<br>சிறு கைத்தொழில் | 90 - 100 |
| 09. | அத்தியாயம் - 07<br>சுயதொழில் | 101 - 112 |
| 10. | அத்தியாயம் - 08<br>கல்வி | 113 - 132 |
| 11. | அத்தியாயம் - 09<br>சுகாதாரமும், மருத்துவசதியும். | 133 - 154 |
| 12. | அத்தியாயம் - 10<br>வீடமைப்பு | 155 - 166 |
| 13. | அத்தியாயம் - 11<br>கூட்டுறவு | 167 - 180 |
| 14. | அத்தியாயம் - 12<br>புனர்வாழ்வு | 181 - 193 |
| 15. | அத்தியாயம் - 13<br>புனர் நிர்மாணம் | 194 - 201 |
| 16. | அத்தியாயம் - 14<br>செயற்பாட்டுத்திட்டம் | 202 - 237 |
| 17. | அடிக்குறிப்புகள் | |
| 18. | உசாத்துணை நூல்கள் | |

# ஆய்வறிக்கை சுருக்கம்

எனது ஆய்வானது மண்முனைப்பற்று பிரதேச பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான அபிவிருத்தித் திட்டம் என அமைகின்றது. இதன் அடிப்படையில் விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில், சுயதொழில், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, கூட்டுறவு, புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்ற துறைகள் மக்களுக்கு வழங்கும் பங்களிப்பு என்ன, எவ்வாறான மாற்றங்களை இவை கண்டு வருகின்றன என்பது பற்றிஆராயப்படுகின்றது.

விவசாயச் செய்கையில் ஈடுபட நிலம், ஊழிய வளம் என்பன கிடைப்பதோடு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் சிறு உதவிகளும் கிடைக்கின்றது. ஆனால் பொருத்தமான நிலம் இன்மை, மூலதனப் பற்றாக்குறை, மரபு ரீதியான தொழில் நுட்பம், குறைந்தளவு உற்பத்தி, குறைந்தளவு சந்தை வாய்ப்பு என்பன விவசாய செய்கை அபிவிருத்திக்குத் தடையாக உள்ளது.

மீன்பிடிக்கென கடல், ஏரி, போன்ற நீர்வளம் காணப்படுகின்றது. மீனவர்களுக்கு உதவிகளை வழங்க நிறுவனங்கள் இயங்குகின்றன. அதிக மீனவர்கள் உள்ளார்கள். ஆனாலும் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடாமை, ஆழ்கடல் மீன்பிடியின் வளர்ச்சியின்மை, மூலதனப் பற்றாக்குறை, அரசின் போதிய உதவியின்மை என்பன மீனவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கின்றன.

சிறுகைத்தொழில், சுயதொழில், முயற்சிக்கான மூலவளங்களும், ஊழிய வளமும் காணப்படுகின்றது. அரசின் ஊக்குவிப்பின்மை, சிறுஅளவிலான உற்பத்தி முறை, நவீன நுட்பம் பயன்படுத்தாமை, பொருட்களின் வடிவமைப்பில் வீழ்ச்சி, மூலதனக் குறைபாடு என்பன இத்துறையின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது.

கல்வி வாய்ப்புக்கென பாடசாலைகள், ஆசிரியர்கள் இருந்தாலும் பாடசாலைகளுக்கு ஒழுங்கான வசதிகள் வழங்கப்படுவதில்லை. பொருத்தமான பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் பற்றாக்குறை மாணவர்கள் - பெற்றோர்களின் அக்கறையின்மை போன்றவற்றினால் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

சுகாதார சேவைகளை வழங்க வைத்தியசாலை இருந்தாலும், வைத்தியர், மருந்து வகைகள் வைத்திய சேவையை வழங்குவதற்கு ஏனைய வசதிகள் இன்மை போன்ற காரணங்களினால் தகுந்த சேவையை மக்கள் பெறமுடியவில்லை. மக்களின் வறுமை நிலை சுகாதார ரீதியான பிரச்சினைகளுக்கு தடையாக காணப்படுகின்றது.

வீட்டற்றோர் தொகை அதிகளவு இல்லாவிட்டாலும், இருக்கும் வீடுகள் அநேகமானவை பொருத்தமற்றவையாகவும், வசதியீனம் கொண்டவையாகவும் காணப்படுகின்றது. வீடு அமைப்பதற்கு பெரும்தொகைப் பணம் தேவைப்படுவதால் இப்பகுதி மக்களால் இத்தேவை பூர்த்தி செய்ய முடியவில்லை.

கூட்டுறவுச் சங்கங்கள் சேவைகளை மக்களுக்கு வழங்கினாலும், இது மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. அதிகமானோருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் துறைகளில் இவை முதலிடாதது அபிவிருத்தியைப் பாதிக்கின்றது.

புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகள் மூலம் பாதிக்கப்பட்ட உயிர்களுக்கும், உடமைகளுக்கும் சொத்துக்களுக்கும் சிறு உதவிகளை பெறக்கூடியதாக இருக்கின்றது. ஆனாலும், இவை காலம் கடந்தே கிடைக்கின்றன புனர்வாழ்வு மூலம் எதிர்பார்த்த பலன் அடையப்படவில்லை. புனர்நிர்மாண திட்டப் பணிகள் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. முக்கிய துறைகளின் வளர்ச்சியின்மை இத்துறையை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளாமை போன்ற காரணங்கள் அபிவிருத்திக்குத் தடையாகக் காணப்படுகின்றது.

குறிப்பிட்ட பல்வேறு துறைகளின் தற்கால நிலையும் அவற்றிலுள்ள பிரச்சினைகளும் எதிர்காலத்தில் எவ்வாறான வழிவகைகளை கையாள்வதன் மூலம் குறிப்பிட்ட துறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் என ஆராயப்பட்டுள்ளது.